# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 22.08.2023 supeedsam.com supeedsam@gmail.com


# விடுதலைப்புலிகள் பௌத்தத்திற்கு பாதுகாப்பையே வழங்கியிருந்தனர்

## வட, கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசாரநாயக்க தேரர்



விடுதலைப்புலிகளின் காலத்தில் பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை, அவர்கள் நாங்கள் அணிந்திருந்த காவி உடைக்கு மரியாதை தந்திருந்ததோடு பௌத்தத்திற்கும் பாதுகாப்பையே வழங்கியிருந்தனர் என வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசாரநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்

வவுனியா ஸ்ரீ போதி தக்சனாராமய விகாரையில் நேற்று இடம்பெற்ற குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த மத தலைவர்கள் குருந்தூர் மலை விடயமானது தொல்பொருள்

02 ஆம் பக்கத்தில்...

# குருந்தூர்மலையில் இந்து ஆலயம் இருந்தமைக்கான எவ்விதமான ஆதாரங்களும் இல்லை



கொழும்பில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு முன்பாக போராட்டங்களை மேற்கொள்ளப்போவதாக இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இனவாதத்தைக் கக்கியிருக்கிறார்.

குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வைத்து அண்மையில் வழிபாடுகளில் ஈடுபட்டார்கள். இதனைத் தடுத்து நிறுத்த இனவாதிகள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் அந்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இந்த பின்னணியிலேயே

02 ஆம் பக்கத்தில்...

# டக்ளஸ்- கருணா விசேட சந்திப்பு



கடலுணவுகளைத் தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் ஏற்றுமதி செய்வது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) கடற்றொழில் அமைச்சில் நேற்று (21) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த

02 ஆம் பக்கத்தில்...

# ரணிலையும் அரசையும் ஓட ஓட விரட்டியடிப்போம்...!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், அவர் தலைமையிலான மொட்டு அரசையும் ஓட ஓட விரட்டியடிப்போம். அந்த நாள் நெருங்கி வருகின்றது. மக்கள் படை எம் பக்கமே நிற்கின்றது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...

## குருந்தூர்மலை விவகாரம்;

# கஜேந்திரகுமாருக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆரம்பமாக கொழும்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டின் முன்பாக இவ்வாறம் போராட்டத்தில் ஈடுபடுவோம் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான

02 ஆம் பக்கத்தில்...

# 13வது திருத்தம் என்பது முற்செடியில் மாட்டிய சேலை...!

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில் கூப்பாடு போடாமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் ஒன்று பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில்

02 ஆம் பக்கத்தில்...

# மொட்டுவின் பலம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த இவர், கடந்த காலங்களில் இடம்பெற்ற போராட்டங்களின்

02 ஆம் பக்கத்தில்...






# 35 எம்.பி.க்கள் அரசுடன் இணைவது தொடர்பில் ஆலோசனை

35 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் ஆலோசித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...




# கரையோர பிரதேசத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிரந்தரத் தீர்வை அவசரமாக மேற்கொள்ளவும்

## உரிய அதிகாரிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் வேண்டுகோள்



**(யூ.கே. காலித்தீன் )**

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேசத்தின் ஹஸனாத் பள்ளிவாசலின் பின்புற கட்டடத் தொகுதியும் மதில்களும் கடல் சீற்றத்தின் காரணமாக சேதமுற்று காவு கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் பைஸால் காசிமின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஓரிரு தினங்களில் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாணத்திற்கு பின்னராக ஏற்பட்ட கடலரிப்பினால், கடற்றொழிலை பிரதான ஜீவனோபாயமாக கொண்டு வாழும் கரையோர பிராந்திய மக்களின் வாழ்க்கை நிலை சொல்லொண்ணா துயரங்கள் நிறைந்ததாக மாறிவிட்டது.

கடலரிப்பினை தடுப்பதற்கான தற்காலிக நடவடிக்கைகளை அரசும் மற்றும் திணைக்களங்களும் அவ்வப்போது செய்வது வழமை, இருந்த போதிலும் கடந்த காலங்களை விட தற்போது கடலரிப்பின் சீற்றம் மிக மோசமாக காணப்படுகின்றது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் கடலரிப்பின் வீரியம் அதிகரித்தமையை அடுத்து நேற்று திங்கட்கிழமை (21) மாலை கடலரிப்பின் வீரியம் காணப்படும் இடங்களில் ஜியோ பேக்குகளை இட்டு பாதிப்பினை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும், நிரந்தரத் தீர்வுக்கான திட்டத்தினை தயார் செய்யுமாறும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர், கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை தொடர்பினை ஏற்படுத்தி ஓரிரு தினங்களில் நிரந்தர தீர்வினை மேற்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் வேண்டுகோள் விடுத்துள்ளார். நடவடிக்கையினை மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் அவர்களுக்கு சாய்ந்தமருது மீனவ சமூகமும் ஹஸனாத் பள்ளிவாசல் நிருவாகத்தினரும் நன்றியினை தெரிவிக்கின்றனர்.

## 13வது திருத்தம் என்பது முற்செடியில்...

அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக இலங்கையில் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தம் தற்போது முற் செடியில் மாட்டிய சேலையைப் போல் உள்ள நிலையில் அதனை கிழியாமல் எடுத்து செய்ய வேண்டியதை செய்வதே எமது இலக்காக இருக்க வேண்டும்.

இதை ஏன் நான் உதாரணமாக கூறினேன் என்றால் பதின்மூன்றுக்கு எதிரானவர்கள் தென்னிலங்கையில் இருக்கின்ற நிலையில் பதின்மூன்று தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஆரவாரப்பட்டால் தேவையற்ற பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கை இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நான் இலங்கைக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்பதற்காக தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கம் ஊடாக பிரச்சனை அணுகுதலை இன்று வரை செயல்படுத்திக் கொண்டு வருகிறேன்.

பிரேமதாச காலத்தில் வாகனங்களில் (சிறீ) எழுத்துப் பதிவிடுவது தமிழ் மக்களின் முதலாவது போராட்டமான சிறீ எதிர்ப்பு போராட்டத்தை அப்போதைய தமிழ் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

ஆனால், குறித்த போராட்டத்தை நீடிக்க விடாமல் இரவோடு இரவாக பிரேமதாசா அரசாங்கத்தோடு கச்சிதமாக பேசி கலவரங்கள் ஏற்படாத வகையில் (சிறீ ) தீர்மானத்தை இல்லாமல் செய்தோம்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் நமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில் அவர்களின் விருப்பத்தை மீறி தீர்மானங்களை மேற்கொள்வது கஷ்டமான காரியம்.

அதேபோன்றுதான் 13 வது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்களை குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயல்பட்டு வரும் நிலையில் அவர்களின் உசுப்பேத்தல்களுக்கு தமிழ் தரப்புகள் கூக்காடு போட்டால் அரசாங்கத்துக்கு இடையூறுகள் ஏற்படும்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஆரம்ப கட்ட தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்ற நிலையில் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆகவே பதின் மூன்று தொடர்பில் தேவையற்ற பேச்சுக்களை தவிர்த்து தந்திரமான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணிலையும் அரசையும் ஓட ஓட ..

தானும் அரசும் கவிழப்போகின்றதை ரணில் விக்கிரமசிங்க உணர்ந்துவிட்டார். அதனால் தான் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமில்லை என்று அவர் உளறுகின்றார்.

மக்கள் ஆணை இல்லாத ஒருவர் எப்படி ஜனாதிபதி பதவியில் இருக்க முடியும்? மக்கள் ஆணையை இழந்த அரசு எப்படி ஆட்சியைத் தொடர முடியும்? இலங்கையில் விசித்திரமான ஜனாதிபதி தலைமையிலான அரசு பதவியில் இருக்கின்றது.

மக்களை வதைக்கும் இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய ஆரம்பித்துள்ளார்கள். ரணில் – மொட்டு அரசை ஓட ஓட விரட்டியடிப்போம் என தெரிவித்தார்.

## டக்ளஸ்- கருணா விசேட சந்திப்பு

தனியார் முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டிருந்தனர்.

சர்வதேச சந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டிற்கு தேவையான அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்வதுடன், கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் எனவும் இச்சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் வலியுத்தியுள்ளார்.

## விடுதலைப்புலிகள் பௌத்தத்திற்கு

திணைக்களத்திற்கு உரியது. இதனை தனி ஒரு மதம் மட்டும் தனக்கானது என உரிமை கொண்டாட கூடாது. சிங்கள பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது, ஆனால் இங்கு தமிழ் பௌத்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பதுவே உண்மை.

தெற்கில் சம்பந்தமே இல்லாமல் சிங்கள பௌத்த கிராமத்திற்குள் கிறிஸ்தவ மதகுருவோ அல்லது சைவ பூசகரோ வந்து தங்கள் தளம் எனகூறி உரிமை கொண்டாடினால் சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா..?

அவ்வாறு இருக்கும் போது தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர்மலை பகுதியில் பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால் தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்.

வணக்க ஸ்தலங்கள் எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியது சிங்கள பௌத்த என்றில்லாமல் நாங்கள் இலங்கையர்கள் யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலைக்கு நாங்கள் சிந்திக்க வேண்டும்.

மேலும் ஒரு சிலர் இவ்விடயத்தினை அரசியலாக்கி இனங்களுக்கிடையிலான முறுகலினை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர். இவ்வாறான தொல்பொருள் பகுதிக்கான இடத்தின் முழுப்பொறுப்பினையும் தொல்பொருள் திணைக்களம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றும் இதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக்கூடாது இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இச் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமசாரநாயக்க தேரர், நாகதீப ரஜமகா விகாரை விகாராதிபதி பூஜ்ய தவத கல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக்கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம சுமணதிஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன்,கணேசபுரம் கருமாரி நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு பிரமசிறி பூ. முகுந்தன்சர்மா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## 35 எம்.பி.க்கள் அரசுடன் இணைவது தொடர்பில் ஆலோனை

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு பின்னரான எதிர்ப்பு போராட்டங்களைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமா செய்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அமைந்த அரசாங்கத்தில் பல்வேறு காட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய காட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், கட்சியின் உறுப்புரிமையும் பறிக்கப்பட்டது.

இந்த நிலையில், நிபந்தனைகளின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவனம் செலுத்தியுள்ளதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவாராயின், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமிக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஆதரவளிக்க வேண்டுமென கருதுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மேலும் 35 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, தனிப்பட்ட நோக்கங்களுக்காக யார் எவ்வாறானதொரு பலம்பொருந்திய கூட்டணியை கட்டியெழுப்பினாலும் மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனாவுடன் இருப்பதாக அதன் செயலாளர் நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

## மொட்டுவின் பலம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

சூழ்ச்சியை மக்கள் புரிந்துக் கொண்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் குறிப்பிட்ட அவர், ஒரு கட்சியில் தலைவர்கள் இருப்பது நல்லதொரு விடயம். ஆனால், அவர்கள் அனைதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இருப்பது தான் விசேட அம்சமாகும்.

எமது கட்சி நாளுக்கு நாள் பலமடைந்து தான் வருகிறது. மக்கள், அன்று எம்மை நம்பினார்கள். இடையில் எமக்கெதிராக போராட்டங்கள் நடைபெற்றன.

ஆனால், இன்று மக்கள் இந்தப் போராட்டங்களின் பின்னால் உள்ள சூழ்ச்சியை புரிந்துக் கொண்டுள்ளார்கள்.

இவற்றுக்கெல்லாம் யார் காரணம், இதற்கு எவ்வாறு நிதி வந்தது என்பது குறித்த தகவல்கள் இன்று வெளியே வந்துக் கொண்டிருக்கின்றன.

எனவே, மக்கள் இன்று இதனை புரிந்துக் கொண்டு, எமக்கான பலத்தை இன்னமும் அதிகரித்துள்ளார்கள்.

இந்நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும் என்பதுதான் நாம் ஜனாதிபதியிடம் எதிர்ப்பார்க்கும் பிரதான விடயமாக உள்ளது.

எம்மால் இணங்க முடியாத விடயங்களை ஜனாதிபதி செய்ய முற்பட்டால், எந்தவொரு நிபந்தனைகளும் இன்றி அதற்கு எதிர்ப்பினை வெளியிட தயங்க மாட்டோம்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்தாண்டு செப்டம்பரில் தான் நடைபெறவுள்ளது. நாமல் ராஜபக்ஷ திறமையான இளம் அரசியல்வாதி என்பதில் மாற்றமில்லை.

எனினும், தற்போதே ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக கருத்து வெளியிட முடியாது.

எவ்வாறாயினும், நாட்டுக்கு தேவையான வேட்பாளரை சரியான நேரத்தில் களமிறக்குவோம் என அவர் தெரிவித்தார்.

## குருந்தூர்மலை விவகாரம்;

உதய கம்மன்பில அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனவாத கொள்கையுடைய பொன்னம்பலம் பரம்பரையின் மூன்றாவது தலைமுறையான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருந்தூர் மலைக்கு சென்று அரங்கேற்றிய நாடகத்தை நாங்கள் அனைவரும் பார்த்தோம்.

தமிழ் அடிப்படைவாதிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிமன்ற அனுமதியை பெற்று அங்கு வருகை தந்ததால் நாங்கள் அவர்களை தடுக்கவில்லை.நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதப்படும் என்பதால் நாங்கள் அமைதியாக இருந்தோம்.

தொடர்ந்து அமைதியாக இருப்பது அவர்கள் வெற்றிப் பெற்றார்கள் என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கும்.

இந்நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும் எனவும் கொழும்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டின் முன்பாக இவ்வாரம் போராட்டத்தில் ஈடுபடுவோம் தெரிவித்ததுடன் இந்த போராட்டத்தில் சிங்கள பௌத்தர்கள் அனைவரும், இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அழைப்பு விடுத்தார்.

அதேவேளை குருந்தூர்மலை குறித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்மானம் எந்தளவுக்கு நியாயமானது என்பது தர்க்கத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை குருந்தூர் விகாரையின் விகாராதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

குருந்தூர் விகாரை 2200 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. குருந்தூர் மலையை சூழ்ந்த பகுதிகளில் புராதன தொல்பொருள்கள் பௌத்த உரிமையை பறைசாற்றுகின்றன.

குருந்தூர் மலை குறித்து மகாவசம்சம் உள்ளிட்ட பௌத்த நூல்களில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.குருந்தூர் விகாரை பௌத்தர்களுக்கு சொந்தமானதா என்பது சந்தேகத்துக்கு உரியதொரு விடயமல்ல.

குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது என்பதற்கும் அங்கு இந்து கோயில் இருந்ததற்கும் எவ்வித தொல்பொருள் சான்றுகளும் கிடையாது.

விகாரையில் உள்ள தூண்களில் ஒரு தூண் வட்ட வடிவில் உள்ளது.இந்த தூண் சிவலிங்கம் என்று குறிப்பிட்டு முறையற்ற தர்க்கத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு குருந்தூர் மலை இந்துக்களுடையது என்ற போலியான தர்க்கத்தை முன்னிலைப்படுத்தி பௌத்தர்களுக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் இடமளித்துள்ளது.ஆனால் பௌத்த மரபுரிகளை பேணி பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையுடைய பௌத்தர்களுக்கு இந்த நாடகத்தை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தமிழ் அடிப்படைவாதிகளின் நாடகத்துக்கு இடமளித்தால் பௌத்தர்களின் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு அரசாங்கம் கோழைத்தனமாக இருக்கலாம். ஆனால் பௌத்தர்கள் கோழைத்தனமாக இருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருக்கும் காலத்தில் தான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளன.அழிக்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் வேண்டியதை செய்யலாம் என்ற நம்பிக்கை உள்ளதால் தமிழ் அடிப்படைவாதிகள் பௌத்த மரபுரிமைகளை அழிக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொள்ளுப்பிட்டியில் வாழ்கிறார். அவரின் தந்தையும் கொழும்பில் வாழ்ந்தார் . அவரது பாட்டனாரும் கொழும்பில் வாழ்ந்தார்.இவர் கொழும்பில் வாழ்ந்துக் கொண்டு விடுமுறை நேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்று இனவாதத்தை பரப்பி அதனூடாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகி சுகபோகமாக வாழ்கிறார்.பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வாழ்வதற்கு எவரும் இடையூறு விளைவிக்கவில்லை.

அவரது பரம்பரைக்கும் எவரும் இடையூறு விளைவிக்கவில்லை.கொழும்பில் உள்ள இந்து கோயில்களுக்க நாங்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகிறோம்.தேசிய நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை நாங்கள் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் சாதாரண தமிழர்கள் அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகளின் கொள்கைகளில் இருந்து வேறுப்பட்டுள்ளார்கள்.

அடிப்படைவாத பிரிவினைவாத கொள்கையுடைய தமிழ் அரசியல்வாதிகளின் பிடிகளில் இருந்து தமிழ் மக்களை விடுவித்தால் மாத்திரமே இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

## குருந்தூர்மலையில் இந்து ஆலயம் இருந்தமைக்கான...

உதய கம்மன்பில, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு முன்னால் போராட்டங்களை நடத்தப்போவதாக எச்சரித்துள்ளார்.

குருந்தூர்மலையில் தமிழர்கள் பொங்கல் வைத்து வழிபாடுகளை மேற்கொள்ளும்போது அதற்கு எவரும் தடை ஏற்படுத்தக்கூடாது என தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நீதிமன்ற தடை உத்தரவு ஒன்றை பெற்றிருந்தார்.

கஜேந்திரகுமார் ஒரு இனவாதப் பரம்பரையில் வந்தவர். குருந்தூர்மலையில் பௌத்த விகாரை இருந்தமைக்கான அதாரங்கள் பல இருக்கின்றன. ஆனால், குருந்தூர்மலையில் இந்து ஆலயம் ஒன்று இருந்தமைக்கான எந்த விதமான ஆதாரங்களும் இல்லை.

அங்கிருக்கும் வட்டமான கல் ஒன்றை சிவலிங்கம் என்று கூறிக்கொண்டு அதனை காட்டி இங்கு இந்து கோவில் ஒன்று இருந்ததாக கூற முயற்சிக்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வரும்போதெல்லாம் வடக்குக், கிழக்கில் உள்ள பௌத்த வழிபாட்டு இடங்களுக்கு தமிழ் அடிப்படைவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இதேவேளை, தாத்தா, அப்பா, மகன் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மூன்று பரம்பரையாக கொழும்பிலேயே வாழ்ந்து வருகிறார்கள். கொழும்பில் வாழ்ந்துகொண்டு வடக்குக்கு சென்று இனவாதத்தை தூண்டுகிறார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமல்ல கொழும்பில் சுதந்திரமாக வாழ்ந்துகொண்டு சுமந்திரன் உள்ளிட்டப் பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்குக்கு சென்று இனவாதத்தைக் கக்கி வருகிறார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் பலர் தெற்கில் சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அதற்கான சுதந்திரத்தை சிங்கள மக்கள் தந்திருக்கிறார்கள். ஆனால், வடக்குக்கு சென்று சிங்கள மக்களுக்கு உள்ள சுதந்திரத்தை இவர்கள் பறிக்கிறார்கள். எனவே, வடக்கில் சிங்கள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காக கொழும்பில் வசிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் முன்பாக போராட்டங்களை மேற்கொள்ள இருக்கிறோம். இதன் முதற்கட்டமாக கொழும்பில் உள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளோம்.

இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம் என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்குடாவில் கடையடைத்துப் போராட்டம்!






**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கல்குடா வர்த்தகர்கள் ஒன்றிணைந்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை திங்கட்கிழமை (21) முன்னெடுத்தனர்.

கோறளைப்பற்று வாழைச்சேனை, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி ஆகிய பிரதேச சபைகளுக்குட்பட்ட மீராவோடை, செம்மண்ணோடை, கருவாக்கேணி ஆகிய வாராந்த சந்தைகளை நிறுத்தக் கோரி வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை, செம்மண்ணோடை ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்களை மூடி இந்த ஆர்ப்பாடம் முன்னெடுக்கப்பட்டது. முறையற்ற விதத்தில் இயங்கி வரும் வாராந்த சந்தைகளினால் தமது வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள் தெரிவிதனர்.

எனவே, பிரதேச சபைகளின் அனுமதிகளுடன் இயங்கி வருகின்ற வாராந்த சந்தைகளை இடைநிறுத்தி தாம் தொடர்ந்தும் சிறப்பான முறையில் வியாபாரத்தில் ஈடுபட பிரதேச சபைகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியவாறு தங்களது எதிர்ப்புக்களை வெளியிட்டனர்.

வாராந்த சந்தைகளை நிறுத்தக் கோரி வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேச சபைகளின் செயலாளர்களிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இப் பாரிய ஆர்ப்பாட்டத்தில் பெரிந்திரளான வர்த்கர்கள் கலந்து கொண்டதுடன், பள்ளிவாசல் நிர்வாகிகள், சமூக மட்ட அமைப்பினர்கள், பௌத்த மத குருக்கள், மௌலவிமார்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் 6 வது வருடாந்த மாநாடும், கௌரவிப்பும்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் 6வது வருடாந்த மாநாடும் ஊடகவியலாளர் கௌரவிப்பும் தலைவர் கலாபூசணம் எம்.ஏ.பகுர்தீன் தலைமையில் அக்கரைப்பற்று எயிம்ஸ் சர்வதேச பாடசாலை கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன் போது புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவததின் 24 படைப்பிரிவின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி, தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே.குணராசா ,தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

போரத்தின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் ஊடகத்துறைக்கு வழங்கிய பங்களிப்புக்காக அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்க நிருவாக தெரிவு

**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் (2023/2024 ) வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிருவாக தெரிவும் திருகோணமலை அலஸ்தோட்டத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் (19) இடம் பெற்றது.

மூவினங்களையும் சேர்ந்த ஒரேயொரு ஊடக சங்மாக கடந்த 31 வருட காலமாக இயங்கி வரும் குறித்த சங்கத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளராக பொ.சற்சிவானந்தம் தெரிவு செய்யப்பட்டார்.

வாக்கெடுப்பு மூலமாக இவர் தலைவராக தெரிவாகியதுடன் திருகோணமலை ஊடக சங்க புதிய நிருவாக சபை உறுப்பினர்கள் பின்வருமாறு;

தலைவர் - பொ.சட்சிவானந்தம்
செயலாளர் - சுமேத ரோஷன்
பொருளாலர் - ஆர்.பாயிஸ்
சிரேஷ்ட உபதலைவர் - மங்களநாத் லியநாராய்ச்சி
கணிஷ்ட உபதலைவர் -பி. லோஜினி
உப செயலாளர்
ஏ.எல்.ரபாய்தீன் பாபு
உறுப்பினர்கள்
எம்.வடிவேல்
ஏ.ஜே.எம்.சாலி
எம்.ஏ.முகமட்
எஸ்.ஹயாக்கிரீவன்
எம்.ஐ.ரிகாஸ் அகமட்
எம்.எஸ்.ஹலீம்,வடமலை ராஜ்குமார்
அ. அச்சுதன்
கே.சூரியகுமாரி
சங்கத்திற்கான கௌரவ ஆலோசகர்
சட்டத்தரணி.ஏ.சீ.எம்.முஸ்ஸில்
★ சங்க கணக்குப் பரிசோதகர்
ஏ.டபிள்யூ.எம்.முஜீப்



நிருவாக குழு உறுப்பினர்களும் தெரிவாகினர். திருகோணமலை மாவட்டத்தில் மூவினங்களை பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த சங்கம் திறம்பட செயற்படுவதுடன் நல்லிணக்கத்துக்கான முன்னுதாரணமாகவும் காணப்படுகிறது.

கடந்த காலங்களில் உயிர்நீத்தவர்களுக்கான இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன் ஊடகவியலாளர் சங்க உறுப்பினர்களுக்கான மேலங்கிகள்,மீடியா டிரக்கரிகளும் இதன் போது வழங்கப்பட்டன.

இதன் போது உரையாற்றிய புதிய தலைவர் பொ.சற்சிவானந்தம் ஊடகர்களாகிய நாம் இந்த மண்ணில் மூவினங்களை சேர்ந்த ஒரு சங்கமாக இந்த சங்கம் மாத்திரம் காணப்படுவது இன நல்லிணக்கத்துக்கு வழிவகிக்கின்றது ஊடக உரிமைகளை வென்றெடுக்க கூடிய வாறு எதிர்காலத்தில் திறம்பட செயற்படுவோம் என்றார்.

# வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் கொடியேற்றம்




**(க.ருத்திரன்)**

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் சின்னக்கதிர்காமம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றதும் மூர்த்தி,தலம்,தீர்த்தம்,என முறையாக அமையப்பெற்றதுமான வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் கொடியேற்றம் (19) சனிக்கழமை வளர்பிறை துதியை திதியும்,உத்தர சட்சத்திரமும்,சித்த யோகமும் கூடிய சுப வேளையில் நண்பகல் 12.03. மணிக்கு இடம்பெற்றது.

மூல மூர்த்திக்கு அபிஷேகம் நடைபெற்று கொடி மரத்திற்கு விசேட கிரியைகள் இடம்பெற்றது. மரபு ரீதியான முறையில் ஆலயக் கங்காணம் இராசைய்யா ஞானகணேசன் என்பவரால் கொடிச்சேலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அருள்மிகு கெஜா வல்லி,மஹாவல்லி சமேதமாக ஸ்ரீ சித்திரவேலாயுர் சுவாமியின் கொடியேற்ற்ற இடம்பெற்றது.இதன்போது அடியார்களின் அரோகரா கோஷத்துடனும் மங்களவாத்தியம் முழங்க, சிவாச்சாரிய குருமார்களின் வேத மந்திர பாராயணத்துடன் கொடியேற்றம் இடம் பெற்றது.இதன்போது நாட்டின் பல பாகத்திலும் இருந்து அதிகளவு பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 18 தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று 6.9.2023 புதன் கிழமை அதிகாலை 4.15 மணிக்கு தீ மிதிப்பு வைபவமும் காலை 7;.10 மணிக்கு புனித கங்கையிலே தீர்தோற்சவமும் நடைபெறும். குறித்த ஆலயத்தில் உற்சவ நிகழ்வுகள் யாவும் வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக் குருக்கள் அவர்களின் அருள் ஆசியுடன் மகோற்சவ பிரதமகுரு கிரிஹா திலகம் பிரம்மஸ்ரீ.அ.செல்வராஜக் குருக்கள் ஆலய பிரதம சிவஸ்ரீ ச.சிவகுமாரக் குருக்கள் ஆகியோரின் அருளாசியுடன் சசி குழுவின் மங்கள வாத்தியத்துடன் உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

# அரச பணியில் ஓய்வு பெற்றாலும் மக்கள் மனதில் ஓய்வு பெறாத நாயகன்

**(வாஸ் கூஞ்ஞ)**

அரச சேவையில் ஒரு ஆசிரியராக பணியை ஆரம்பித்து பொது நிதி திணைக்களம் , திறைச்சேரி , நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தனது 33 வது அரச சேவையை நிறைவு செய்து கடந்த 07.08.2023 அன்று ஓய்வுப் பெற்றுக் கொண்டார் இலங்கை கணக்காளர் சேவை விஷேட தரத்தைச் சேர்ந்த திரு உலகநாதன் சந்திரக்குமாரன் அவர்கள்.

ஓய்வுநிலை கண்காளர் யாழ் மாவட்டத்தின் இளவாலை வயாவிளான் பகுதியைச் சேர்ந்தவர்.

இவர் தனது அரச கடமையில் 1989ம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக தனது அரச பணியைத் தொடங்கி பின் 1990 ம் ஆண்டு முதல் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து முதல் நியமனமாக மன்னார் மாவட்ட செயலகத்தில் 2003 ம் ஆண்டு வரை மன்னார் மாவட்டச் செயலகத்தில் பதில் பிரதம கணக்காளராகவும்

2003 லிருந்து 2005ம் ஆண்டு வரை மன்னார் மாவட்டச் செயலகத்தில் பிரதி மாவட்டச் செயலாளராகவும் (நிதி)

2005 லிருந்து 2007 வரை மன்னார் மாவட்டச் செயலகத்தில் பிரதம கணக்காளராகவும் 2007 லிருந்து 2009 வரை தேசத்தை



கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கணக்காளராகவும்

2009 லிருந்து 2010 வரை தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட திட்ட அலுவலகராகவும் (நிதி)

2010 லிருந்து 2015 வரை பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட கணக்காளராகவும் 30.01.2015 தொடக்கம் 09.11.2015 வரை மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சின் பிரதம கணக்காளராகவும்

2015 லிருந்து 2018 வரை வடக்கு மாகாணம் பிரதிப் பிரதம செயலாளராகவும் (நிதி) இதைத் தொடர்ந்து இவர் மின்னனு அரச கொள்முதல் செயலகம் நிதி அமைச்சின் பகுதி நேர திட்டப்பணிப்பாளராகவும் , பொது நிதி திணைக்களம் . திறைச்சேரி , நிதி அமைச்சில் 06.08.2023 வரை மேலதிக பணிப்பாளராக கடமையாற்றிய நிலையில் தனது அரச பணியிலிருந்து தனது மணிவிழாவுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

மேலும் திரு உலகநாதன் சந்திரக்குமாரன் அவர்கள். மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலய சபையில் இணைச் செயலாளராக செயற்பட்டு வருவதுடன் மன்னார் நலிவுற்றோர் நலன்புரி சங்கம் (அன்னை இல்லம்) மற்றும் வயாவிளான் மீள் எழுச்சிக்கான உதவும் கரங்கள் அமைப்பின் ஸ்தாபகப் பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

இதற்கு மேலாக இவர் மன்னார் லயன்ஸ் கழகத்தின் 304பி யில் இணைந்து மன்னார் மாவட்டத்தின் கல்வி , பொரளாதாரம் நலிவுற்று இருப்போரின் வாழ்வாதாரத்துக்கு தன்னால் இயன்ற பணிகளை செய்து இங்கு மக்களின் மனதில் நீங்காத ஒருவராக திகழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# நாடு பூராகவும் ஆலயங்கள் தேவாலய விழாக்களில் தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டு வரும் கொள்ளை குழுவைச் சேர்ந்த இருவர் மட்டக்களப்பில் கைது

(கனகராசா சரவணன்

மட்டக்களப்பில்; தேவாலயத்தின் திருவிழாவின் போது பெண் ஒருவரின் தங்க சங்கிலியை அறுத்தொடுத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கொள்ளை குழுவைச் சேர்ந்த 3 பெண்கள் குழுவை இயக்கிவந்த வாழைச்சேனை, திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த இரு ஆண்களை சனிக்கிழமை (19) மாலை மட்டு சிறைச்சாலைக்கு அருகில் வைத்து கைது செய்ததுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த 15 ம் திகதி மட்டு மரியால் தேவலாயம் மற்றும் மாமாங்கேஸ்லரர் ஆலைய திருவிழாவின் போது 19 பவுண் தங்கசங்கிலிகள் தீரட்டுபோயிருந்த சம்பவத்தில் 4 பெண்களை கைது செய்தனர்.

இதில் தேவாலய திருவிழாவில் கலந்து கொண்ட பெண் ஒருவரின் 2 அரை பவுண் கொண்ட தங்க சங்கிலியை அறுத்தெடுத்ததாக சந்தேகிக்கப்;படும் கொழும்பு திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 3 பெண்களை பொதுமக்கள் மடக்கிபிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்ததையடுத்து அவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நிலையில் 21 ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வாறு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட 3 பெண்களை சிறைச்சாலைக்கு பார்ப்பதற்காக சென்ற 28 வயதுடைய இருவரை சம்பவதினமான நேற்று சிறைச்சாலைக்கு அருகில் வைத்து கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்படவர்கள் வாழைச்சேனை திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர்கள் எனவும் நாடு பூராகவும் ஆலையங்கள் தேவாலயங்களில் கொள்ளையிடும் கொள்ளை கும்பலை இயக்கி வருபவர்கள் எனவும் இவர்கள் நாடு பூராக ஆலைய தேவாலய திருவிழாக்கள் உற்சவங்கள் தொடர்பாக முகநூல்களில் வெளிவரும் விளம்பரங்களை தரவு இறக்கம் செய்து அதனை நாடு பூராகவும் உள்ள தமது கொள்ளை குழுவைச் சோந்த பெண்களுக்கு வாட்ஸ்;ஆப் மூலம் அந்த விளம்பரங்களை அனுப்பியுள்ளதாகவும்.

இந்த கொள்ளை குழுவின் பிரதான சூத்திரதாரி நீர்கொழும்பைச் சேர்ந்த சுரேஸ் எனவும் அவன் உட்பட கொள்ளை குழுவைச் சோந்த பலர் தலை மறைவாகியுள்ளதாக பொலிசாரின் ஆரப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இதே வேளை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலையத்திருவிழாவின் போது 28 பவுண் தங்க சங்கிலிகள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இச் சம்பவங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 3 பெண்களிடம் இருந்து இதுவரை கொள்ளையிட்ட தங்க சங்கிலிகள்; எதுவும் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# குளவி கோட்டுக்குள்ளானதில் 16 வயது சிறுவன் உயிரிழப்பு

## மூவர் வைத்தியசாலையில்



டி.சந்ரு செ.திவாகரன்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரக்கலை தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) பிற்பகல் விறகு சேகரிக்க சென்ற சிறுவர்கள் மீது குளவிக் கொட்டியதில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் அறுவர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இதில் மூவர் சிசகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதுடன் மூவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் ஒருவர் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர் .

நுவரெலியா பம்பரகலை தோட்டத்தைச் சேர்ந்த சிவபொருமாள் தில்ஷான் (16) என்ற சிறுவணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் குளவி கொட்டும் போது தப்பித்து ஓடுவதற்கு முயன்று தடுக்கி விழுந்து இடத்திலேயே கடுமையான குளவி கொட்டு தாக்குதலுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார் , சடலம் நுவரெலியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை இன்று (21) திங்கட்கிழமை வைத்தியசாலையில் இடம்பெற்று பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# திருகோணமலையில் இனிய நந்தவனம் இலங்கை சிறப்பிதழ் சஞ்சிகை வெளியீடு..!









( ஹஸ்பர் )

வாசல் வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழ் 20.08.2023 (ஞாயிற்றுக்கிழமை) நேற்று மாலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச.திருச்செந்தூரன், கவிஞர் க.யோகானந்தம், கவிஞர் தில்லைநாதன் பவித்ரன் உள்ளிட்டோர் உரையாற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில், சேனையூர்- திருகோணமலையை சேர்ந்த அனாமிகா பண்பாட்டு மையத்தின் நிறுவுனர் பேராசிரியர் பால. சுகுமார், வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் சிரேஷ;ட உதவியாசிரியர் கந்தையா சிவராசா, கெப்பிட்டல் வானொலியின் முன்னாள் சிரேஷட நிகழ்ச்சி முகாமையாளர் தில்லையம்பலம் தரணீதரன் உள்ளிட்டோர் கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டு போட்டியில் நாவிதன்வேளிக்கோட்டம் முதலிடம்!





(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் 469 புள்ளிகளைப் பெற்று நாவிதன்வெளிக் கோட்டம் முதலிடத்தை சுவீகரித்துக்கொண்டது.

இரண்டாம் இடத்தை 435 புள்ளிகளைப் பெற்ற சம்மாந்துறை கோட்டமும், மூன்றாம் இடத்தை 183 புள்ளிகளைப் பெற்ற இறக்காமம் கோட்டமும் பெற்றுக்கொண்டன.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் தலைமையில் இடம் பெற்ற போட்டியில் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

நாவிதன்வெளி கோட்டத்தில் 171 ஆண்களும் 298 பெண்களும் இந்த 469 புள்ளிதகளைப் பெற்றுக் கொண்டனர். சம்மாந்துறை கோட்டத்தில் 195 ஆண்களும் 240 பெண்களும் 435 புள்ளிகளைப் பெற்றனர்.

இறக்காமம் கோட்டத்தில் 183ஆண்கள் 183 புள்ளிகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அங்கு பெண்கள் கலந்து கொள்ளவில்லை.

போட்டிகள் யாவும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பிளாந்துறையில் குருதி கோடையாக வழங்கி வைப்பு







மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தின் 140வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு குருதி கொடையாக வழங்கும் மனிதாபிமான செயற்பாடு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது(20.08.2023)

வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், வித்தியாலய அதிபர் க.அரசரெத்தினம் தலைமையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

வித்தியாலய பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் இக் குருதி கொடையை வழங்கினர். இதனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் பெற்றுக்கொண்டனர்

# நானுஓயாவில் கேப்ரக வாகனம் விபத்து: அறுவர் காயம்

(டி.சந்ரு செ.திவாகரன்)



நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா தலவாக்கலை ஏ7 பிரதானவீதியில் கிரிமிட்டி பகுதியில் கொழும்பு பிலியந்தலையிலிருந்து நுவரெலியா நகருக்கு பயணித்த கெப் ரக வாகனமொன்று வீதியைவிட்டு விலகி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து இன்று முற்பகல் (21) திங்கட்கிழமை விபத்துக்குள்ளாகியதில் 6 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் அனைவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் போனதால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் . இவ்விபத்துத் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 12

# செய்யும் தொழிலே தெய்வமாகலாம்

**செய்யும் தொழிலை நேசித்துப் பணியாற்றினால் செய்யும் தொழில் கூடத் தெய்வமாகலாம்**

உலகில் சுத்திகரிப்புத் தொழிலாளி தொடக்கம் நாட்டின் ஜனாதிபதி வரை தினமும் பணி செய்து கொண்டே இருக்கின்றனர். எந்தவித கட்டளையுமின்றித் தாமாகவே முன்வந்து செய்தலும் பணிதான். வீட்டுத் தலைவன் வீட்டுத் தலைவி செய்வதும் பணிதான். பலர் ஊதியத்துக்காகச் செய்கின்றனர். சிலர் பேரும் புகழுக்காகச் செய்கின்றனர். ஊதியமின்றி முன்வந்து பொறுப்பெடுத்த கடமைக்காகச் செய்கின்றனர். பலர் தாம் பொறுப்பெடுத்த பணியை அர்ப்பணிப்பு ஈடுபாட்டோடு செய்கின்றனர். இன்னும் பலர் கடமைக்காகச் செய்கின்றனர். பலர் ஏனோ தானோ எனச் செய்து முடிக்கின்றனர். எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு பிடிப்பும், ஈடுபாடும் அர்ப்பணிப்பும் விசுவாசமும் இருத்தல் வேண்டும். எத்தொழில் என்றாலும் தாம் செய்யும் தொழிலை நேசிக்க வேண்டும். அதனை மதிக்க வேண்டும். நமது விசுவாசத்தைத் தொழிலில் காட்ட வேண்டும். தொழிலில் வெறுப்புக் கொள்ளாது அதனை நேசித்துப் பணி செய்யும் நோக்கில் தமது மேலதிகாரிகளுடன் இணைந்து மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும். தொழிலை நேசித்து விசுவாசத்தோடு பணியாற்றும் போது செய்யும் தொழிலும் தெய்வமாகின்றன.

ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் தொழிலில் சுய தேவைக்காகவும் தனது குடும்பம், நிறுவனம், சமூகம், நாட்டுக்கெனவும் பணி செய்தனர். தொழிலொன்றைத் தேர்ந்தெடுத்து அத்தொழில் திருப்தியோடு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே சிறந்ததாகும். ஒரு பதவி நமக்குக் கிடைக்கிறதென்றால் அதனை நமது சுய நலத்துக்காக அன்றி பொது நலத்துக்காகப் பயன்படுத்த வேண்டும். நியமனம் பெற்றதிலிருந்து பதவி ஓய்வு பெறும்வரை சட்டங்கள், தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள், பாராளுமன்ற நிலையியல் சட்டங்கள், அறிவுறுத்தல்கள், உபவிதிகளை அனுசரித்தும், கட்டுப்பட்டுப் பணியாற்றுகிறோம். அதற்காக நமக்குச் சம்பளம் கிடைக்கிறது. அச்சம்பளம் கடமையைத் திருப்தியாக நிறைவேற்றியமைக்காகக் கிடைக்கிறது. தொழிலின் மூலம் நாம் பெறும் சம்பளம் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் பணியாற்றியமைக்காகக் கிடைக்கிறது என்ற சந்தோசம் நமக்கு வரும்போதுதான் தொழில் திருப்தி ஏற்படுகிறது. அவ்வாறு பணியாற்றும்போது அத்தொழிலின் ஊடாகத் தெய்வத்தைக் காணலாம் என்பதனைச் ‘செய்யும் தொழிலே தெய்வம்’ என்ற முதுமொழி உணர்த்துகிறது.

நமது உடலையும் உயிரையும் எனது உயிர், எனது உடல் என்றுதான் கூறுகிறோம். இவ்வாறு கூறும் போது ஓர் உண்மை புலப்படுகிறது. இந்த உயிரும் உடலும் நமக்குச் சொந்தமில்லை என்பது தெளிவாகிறது. நாம் இறக்கும்போது நம் உடலில் இருக்கும் ஆத்மா எனப்படும் உயிர் நம்மிடம் இருந்து பிரிந்து செல்கிறது. இந்த உயிர் எங்கே செல்கிறது? யாரிடம் செல்கிறது? எங்கு தங்குகிறது. ஆத்மாவுக்கு என்ன நடக்கிறது என்பதெல்லாம் விவாதத்துக்குரிய விடயங்கள். இந்த ஆத்மா சுவர்க்கத்துக்குச் செல்கிறதா? சுவர்க்கம் என்றால் என்ன? அது எங்குள்ளது? அங்கு என்ன நடக்கிறது. ஆத்மாக்கள் சொர்க்கத்துக்குச் செல்கின்றனவா? நரகத்துக்குச் செல்கின்றனவா? ஏன் உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பதற்கான திட்டம் எங்கு மேற்கொள்ளப்படுகிறது? மறுபிறப்பு என்பது உண்மையா என்பதெல்லாம் பலராலும் விவாதிக்கப்படுகின்ற விடயங்களாக உள்ளன. உலகில் உள்ள மதங்களில் பல இதனை ஏற்றுக் கொள்கின்றன. நமது உயிர் இறைவனிடம் சென்றுவிடுகின்றன என்பதைப் பல மதங்கள் ஏற்றுக் கொள்கின்றன. இதில் மதங்களுக்கிடையே சில கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அடிப்படையில் பல கொள்கைகள் ஒன்றித்திருக்கின்றன. நமது உடல் பஞ்ச பூதங்களினால் ஆனது. இறந்த பின்னர் பஞ்ச பூதங்களிலாலான வித்துடல் (சடலம், பிரேதம், சவம், மையத்து, பூதவுடல்) பஞ்ச பூதங்களுக்குள் சங்கமமாகிறது. இதேபோலவே உலகிலுள்ள அனைத்துக்கும் நடக்கின்றன.

வேதாந்தத்தில் (உபநிடதம்) உயிர் தொடர்பான கோட்பாட்டில் ‘நானே பிரம்மம்’ ‘நீயே பிறம்மம்’ ‘அதுவே பிரம்மம்’ என்பதன் மூலம் இறைவன் என்னிலும், உன்னிலும், அதனிலும் உயிராக (ஆத்மாவாக) இருக்கிறான் என்பது புலனாகிறது. இறைவனே உயிராக இருந்து இந்த உலகையும், உலகிலுள்ள அனைத்தையும் இயக்கிக் கொணடிருக்கிறான். ‘நானே நீ, ‘நீயே நாள்’ ‘அதுவே நான்’ என்பதைப் புரிந்து கொண்டால் இந்த உலகில் பஞ்சமகா பாவங்களுக்கு இடமே கிடையாது. இதனைச் சாதாரணமாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதனால் ‘கள்ளப் புலனைந்தும் காணாத மணிவிளக்காக இறைவன் இருக்கிறான்’ என்கிறது வேதாந்தமும் சைவ சித்தாந்த சாத்திரங்களும். இந்த உண்மையை விளங்கிக் கொள்வதற்கு ஆத்மா பக்குவப்பட வேண்டும். அதற்கு ஆன்மீக சிந்தனைகள் தேவைப்படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் எங்கும், எதிலும், செய்யும் தொழிலிலும் இறைவனைக் காணலாம்.



இந்த உடலை இயக்குவது உயிர். உடலுக்கள்ளே கண்ணுக்குத் தெரியாத அருவமான சூட்சுமப் பொருளாக மறைந்திருக்கிறது. மறைந்திருந்து கொண்டு உடலை இயக்கிக் கொண்டிருக்கிறது. உயிர் இந்த உடலுக்குள் இருப்பதற்கும் உடலைப் பாதுகாப்பதற்கும், சுகதேகியாக வாழ்வதற்கும் பஞ்சபூதங்களைப் பயன்படுத்துகின்றோம். இவற்றினூடாகவே நமக்குத் தேவையான உணவு, நீர், உறையுள் ஆகியன கிடைக்கிறது. இயற்கையைப் பயன்படுத்திய மனிதன் சுகதேகியாக வாழ்ந்தான். செயற்கையைப் பயன்படுத்திய மனிதன் மனதில் சலனம், சஞ்சலத்தோடு நோயாளியாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். இதற்கு யார் காரணம். ‘உனது இன்றைய நிலைக்கு நீயே காரணம்’ என சுவாமி விவேகாநந்தர் கூறுவதில் இருந்து யார் காரணம் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு உயிர்களுக்குள்ளும் இறைவன் இருக்கிறான் என்பதை விளங்கிக் கொண்டால் நாம் எவருக்கும் தீங்கு செய்ய மாட்டோம். நாம் செய்கின்ற ஒவ்வொரு பாவத்தையும் உடலுக்கள் இருக்கின்ற இறைவன் நமக்கே திருப்பி விடுகின்றான். நாம் விதைக்கின்ற வினைகள் யாவும் என்றோ ஒருநாள் நமக்கே வந்து சேரும். அந்த வேளையில் நம்மைப் பாதுகாப்பதற்கு நமக்கருகில் யாரும் இருக்க மாட்டார்கள். இதனையே நியூட்டனின் மூன்றாவது விதியும் சுட்டி நிற்கின்றது. ‘வினை விதைத்தவன் வினை அறுத்தே ஆகவேண்டும்’ இதிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இன்று அரச தொழிலில் இருப்பவர்கள் பலர் இந்தத் தத்துவ உண்மையை விளங்கிக் கொள்ளாமல் தொழிலில் ஏனோ தானோ என்று கடமையாற்றி மக்களை அலைக்கழிக்கின்றனர். சிலர் பதவியில் இருந்து கொண்டு கர்வத்துடன் செயற்படுவர். சிலர் எந்த நேரமும் சுடு சொற்களால் பேசுவர். சிலர் கணக்குப் பார்த்து விடுப்பு எடுத்துவிட்டு சமூகமளித்த நாட்களிலும் தனக்குரிய கதிரையில் அமர்ந்திருந்து சேவை நாடி வரும் மக்களுக்குச் சாட்டுப் போக்குக் கூறி அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் கையூட்டுப் பெறுவதற்காக ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் கிடைக்க இருப்பதையும் கிடைக்காமலாக்குகின்றனர். சிலர் கோவையிலுள்ள ஆவணங்களை இல்லாமல் செய்துவிடுகின்றனர். சிலர் மேலதிகாரியின் செல்வாக்கினால் இறுமாப்புடன் பணியாற்றுகின்றனர்.

பல கூலித் தொழிலாளர்கள் தாம் பெற்ற கூலிக்கு நிகராக வேலை செய்வதை விடுத்து வெட்டிப் பேச்சுப் பேசிக் கொண்டு உரிய வேலையைச் செய்யாமல் இழுத்தடிக்கின்றனர். கட்டுமானப் பணியில் ஈடுபடுவோர், தச்சுத் தொழிலில் ஈடுபடுபவர்கள் நாள் சம்பளம் பேசிக் கொண்டு வேலையை இழுத்தடிப்பார்கள். இன்று பலரிடம் தொழில் விசுவாசத்தைக் காண முடிவதில்லை. பொய், புரட்டு, ஏமாற்றுத்தனத்தையே பலரிடம் காண முடிகிறது. நம்பிக்கை, விசுவாசத்தைக் காண முடிவதில்லை. பலர் ஏமாற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். ஏமாறுவோர் இருக்கும்வரை ஏமாற்றுவோரும் இருந்து கொண்டே இருப்பார்கள்.



சோலையூர்க் குருபரன்

அரச பணியில் இருப்போர் மக்களுக்கு மனம் கோணாமல் நிறைவான பணியாற்ற வேண்டும். படிப்பறிவற்ற பாமர, ஏழை மக்களை ஏமாற்றி அலைக்கழிக்கக் கூடாது. ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்’ என்பது போல் வஞ்சகம், சூது, வாது, கள்ளம், கபடம், அடுத்துக் கெடுத்தல், பொறாமை இல்லாமல் நம்பிக்கையோடு வாழும் அத்தகையவர்களை ஏமாற்றுவதும், அலைக்கழிப்பதும் மிகப் பெரிய பாவச் செயல்களாக அமையும். இத்தகையவர்களுக்குத் துரோகமிழைப்பது இறைவனுக்குத் துரோகமிழைப்பதாக அமையும். அவர்களின் மனம் கோணாது நடந்து கொள்ள வேண்டும். அலுவலகத்தில் அவர்களது பணியை நிறைவேற்றிக் கொடுத்ததும் சந்தோசம், மகிழ்ச்சி, நன்றிக் கடன், நம்பிக்கையோடு கள்ளம், கபடமில்லாமல் நம்மைப் பார்க்கின்ற பார்வை இருக்கின்றதே அந்தப் பார்வையில்தான் இறைவனைக் காணலாம். கலியுகத்தில் இறைவன் உருவத் திருமேனியில் காட்சி கொடுப்பதில்லை. இவ்வாறானவர்கள் மூலமாக அவர்களுக்குள்ளெ உயிராக இருக்கின்ற இறைவன் காட்சி கொடுக்கின்றான். அவர்கள் பார்வை மூலமாகக் கிடைக்கும் வாழ்த்தும், ஆசீர்வாதமும் எமக்குப் புதிய உத்வேகத்தையும் தெம்பையும் கொடுப்பதோடு நமது குடும்பம் பல ஆண்டுகள் நிம்மதியோடு வாழ வழிவகுக்கும்.

இத்தகையவர்களுக்கு உரிய சேவையைச் செய்யாமல் அலைக்கழித்து, அவர்களை ஏமாற்றினால் அவர்கள் பட்ட வேதனையும், வலியும், அடைந்த ஏமாற்றத்துக்கும் உரிய பாவமும் பழியும் நாம் உயிருடன் உள்ளவரை தொடரும். இத்தகையவர்கள் எக்காலமும் தப்பித்துக் கொள்ள முடியாது. மகாபாரத்தில் முதல் நாள் யுத்தத்துக்காக பண்டவர் சேனையும் கௌரவர் சேனையும் எதிரெதிரே நிற்கின்றனர். அர்ச்சுனன் எதிரணியில் நிறபவர்களைப் பார்க்கிறான். எதிரே பிதாமகர் பிஷ்மர், குரு துரோணாச்சாரியர், கிருபாச்சாரியார், பெரியப்பா திருதராட்டினரின் துரியோதனன் உட்பட நூறு புதல்வர்கள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் எனச் சகலரும் ஆயுதமேந்தி நிற்கின்றார்கள் அவர்களைப் பார்த்ததும் இவர்களுடனா யுத்தம் செய்ய போகிறேன் எனத் தேரில் இருந்து இறங்கிக் கையில் இருந்த காண்டீபத்தைக் கைநழுவவிட்டு திகைத்துப் போய் நிற்கிறான். அந்த வேளையில் அர்ச்சுனனின் தேரோட்டியாக இருந்த கண்ணன் தேரிலிருந்து இறங்கி வந்து அர்ச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்கின்றார். இது உனது யுத்தமல்ல அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காக நான் செய்யும் யுத்தம். இதில் உங்களைக் கருவியாகப் பயன்படுத்துகின்றேன். உனது கடமையைச் செய், பலனை எதிர்பாராதே. அந்தப் பாவம் பழிக்கான பலன் அனைத்தும் என்னை வந்து சேரும். ஆகையினால் மனம் தளராமல் யுத்தம் செய் என்றதும் அர்ச்சுனன் காண்டீபத்தை ஏந்தி யுத்தம் செய்கிறான்.

இந்த மகாபாரதச் சம்பவத்தில் இருந்து இரு உண்மைகள் புலப்படுகின்றன. ஒன்று, நீ பொறுப்பெடுத்த தொழிலுக்குரிய கடமையையும் பொறுப்பையும் நீயே நிறைவேற்ற வேண்டும். உனக்குரிய கடமையை இன்னொருவர் நிறைவேற்ற முடியாது. நீ பணியில் இருந்து சென்ற பின்னரே அப்பணி இன்னொருவரிடம் ஒப்படைக்கப்படும். மற்றொன்று, உன்னையும் உன்னிடம் சேவை நாடி வருபவர்களையும் உயிராக இருந்து இயக்கிக் கொண்டிருப்பவன் நான்தான். உனது அறிவும் உடலும் இன்னொரு உடலுக்குச் சேவகம் செய்கிறது. அச்சேவை உயிருக்கல்ல என்பதை மறந்து விடாதே. அந்த உடலுக்குள் உயிராக இருந்து ஒவ்வான்றையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். அந்த உடலினால் பிரதிபலிக்கப்படும் யாவும் உயிராகிய என்னை வந்து சேரும். நீ நல்லது செய்தால் நல்லதாக வந்து சேரும். தீமை செய்தால் தீமையாக வந்து சேரும். இதிலிருந்து யாரும் தப்பிக்கவே முடியாது என்பது உணர்த்தப்படுகின்றது.

‘கடமையைச் செய்’ என்பது எல்லோருக்கும் பொதுவானது. இதனைச் செவ்வனே செய்வதை விடுத்துப் பாவக் கணக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த உயிர் இறைவனின் சொத்து. இந்த உடல் பஞ்ச பூதங்களின் உடமையாகிறது. நமக்கென்று எதுவுமில்லை. நாம் சேர்த்து வைத்த பேரும் புகழுமே நம்மோடு சேர்ந்திருக்கும். இதுவே உலக நியதியுமாகும். இந்த உண்மையே தத்துவமாகும். எனக்குள்ளும், உனக்குள்ளும், அவற்றுக்குள்ளும் இறைவன் இருக்கிறான் என்கின்ற உண்மையை மறந்து போலியை நாடிச் சென்று சேவகம் செய்து பணத்தைக் கொட்டி இறைக்கின்றோம். நீ உனது பணியில் அர்ப்பணிப்புடன் சேவை செய்வதும் இறைவனைச் சென்றடையும். சேவை செய்யாமல் இருப்பதும் இறைவனைச் சென்றடையும். இதனை உணர்ந்து கொள்ளக் காலம் எடுக்கும் அதற்கள் நாம் பலவற்றை இழந்திருப்போம்.

கற்பித்தலையும் அதனால் ஏற்பட்ட திருப்தியையும் மனைநிறைவையும் மகிழ்ச்சியாகக் கொண்ட ஆசிரியர் ஒருவர் இருந்தார். வகுப்பறைக்குள் நுழைந்தால் அனைத்து மாணவர்களையும் அன்பால் அரவணைத்துப் பாடம் கற்பிக்கும் அழகு அவருக்கு நிகர் அவரேதான். அத்தனை மாணவர்களும் வைத்த கண் வாங்காமல் அவரின் பாடத்திலேயே இலயத்திருப்பார்கள். நேரம் தவறமாட்டார். 40 நிமிடத்தையும் மிகப் பெறுமதியானதாகக் கருதிப் பாடம் நடத்துவார். விடுப்பு எடுப்பது மிக மிகக் குறைவு. பாடத்துக்கு மணி அடித்ததும் ஓரிரு நிமிடத்தில் வகுப்பறைக்குள் நுழைவார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, விசுவாசம் அனைத்தும் அவருடன் பிறந்தவையாகக் கணிக்கப்பட்டன. யாருடனும் பிரச்சினைப்படமாட்டார். அவர் ஆசிரியத் தொழிலுக்கு காலடி எடுத்து வைத்தநாள் முதல் மாணவரின் எதிர்காலமே அவரின் இலட்சியமாகக் கொண்டு பணியாற்றினார். அவர் பணி ஓய்வில் சென்றதும் ஒருமுறை நோய்வாயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதுதான் அவர் பெற்றிருந்த கௌரவத்தையும் பேரையும், புகழையும் காண முடிந்தது. அவர் வைத்தியசாலையில் இருப்பதை அறிந்து அவரிடம் கற்றவர்கள் நாட்டின் நாலா திசைகளிலுமிருந்து வந்து பார்வையிட்டு நலம் விசாரித்துச் சென்றார்கள். அவருக்கு மூன்று பிள்ளைகள், மூத்தவன் பொறியியலாளர், இரண்டு பெண்களும் வைத்தியர்கள். நல்ல நிலையில் இருக்கிறார்கள். இன்னொருவர் இதற்கெல்லாம் எதிர் மாறானவர். நான்கு பின்னைகளில் எவருமே நன்கு கற்று அரச தொழில் புரியவில்லை. அவர்கள் எவரும் குறிப்பிடும் படியாக நல்ல நிலையிலும் இருக்கவில்லை. அவர் செயத தொழிலை தெய்வமாக மதிக்காததனால் அவர் சமூகத்துக்குள் எநத மதிப்பும் இல்லாதவராக வாழ்ந்து மடிந்தார்.

இன்னொருவர் அரச அலுவலகமொன்றில் எழுதுவிளைஞராகப் (முகாமைத்துவ சேவை அலுவலர்) பணியாற்றியவர். அலுவலகத்தில் அரச ஊழியர்கள் பலரின் சுயவிபரக் கோவைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர். பல கோவைகளில் பல முக்கியமான ஆவணங்களைக் கவனக் குறைவு காரணமாக இல்லாமலாக்கியவர். அவர் பணியற்றிய சகல அலுவகங்களிலும் பலரின் வெறுப்புக்கும் வசைக்கும் ஆளாகியவர். ஆறு பிள்ளைகளில் ஒருவரைத் தவிர மற்ற எவரும் குறிப்பிடும்படியாக இருக்கவில்லை. தாய், தந்தையர் செய்த பாவமும் பழியும் பிள்ளைகளைச் சென்றடையும். செய்யும் தொழிலே தெய்வம் என மதிக்காத பலருக்கு இதுதான் நடந்து கொண்டிருக்கின்றன.

விசுவாசத்துடன் சேவை செய்து பெறப்படாத சம்பளம் குடிபோதைக்கும், தனக்கும், பிள்ளைகளது மருந்துச் செலவுக்கும், ஆடம்பரச் செலவுகளுக்கும் விரையம் செய்யப்படும். மக்களுக்குச் செய்யப்படும் சேவையே இறைவனுக்குச் செய்யும் சேவையாகக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொருவரும் தாம் செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதிப் பணியாற்றினால் வாழ்க்கையில் பல துன்பங்களைத் தவிர்த்துச் சந்தோசமாக வாழலாம்.



**முடிந்தவரை நற்பணி
செய்து வாழும் வாழ்க்கையே
மனமுவந்து ஈசன் ஏற்கும்
வாழ்க்கையதாகும்**

ஈசன் ஏற்கும் வாழ்க்கை தொடரும்....

# முன்மாதிரியான அரச ஊழியர்கள் 5 பேர் தேரிபு செய்யப்பட்டு ட்ரான்ஸ் பேரன்ஸினால் கோழும்பில் கௌரவிப்பு






**(அஷ்ரப் ஏ சமத்)**

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனமானது (Transparency International Sri Lanka (TISL) 2022-23 ஆண்டுக்கான இன்டக்ரிட்டி ஐக்கன் (Integrity Icons Sri Lanka )(நேர்மைக்கு மகுடம்) விருது வழங்கும் இறுதி விழா ஆகஸ்ட் 17ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நேர்மையுடன் அர்ப்பணிப்புடன் சிறந்த விழுமியங்களை கடைப்பிடித்து பொது மக்களுக்கு சேவையாற்றும் அரச ஊழியர்களை அங்கீகரித்து கௌரவிக்கும் ஓர் தளமாக இந் நிகழ்வு திகழ்கிறது. தான் ஓர் அரச அதிகாரி தனக்கு அரச அலுவலக வாகமொன்று வழங்கப்பட்டிருந்தாலும்.. தனது சொந்த சேவைக்கு. அல்லது தனது மகனை மகளை ஒருபோதும் அரச வாகனத்தில் ஏற்றி பாடசாலைக்கு அனுப்பாதவர்கள். அவர்களது பிள்ளைகளை சாதாரன போக்குவரத்து பஸ்ஸிலேயே பாடசாலை போவதற்கு அனுமதித்தவர்கள். அரச சேவை என எவர் வந்தாலும் அவருக்குரிய சேவையை வழங்குபவர்கள், மக்களை அலைச்சல் படுத்தாமல், தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அரச ஊழியர்களையும் அன்பாக தான் பெறும் மாதச் சம்பளம் பொது மக்களது வரியில் பெறப்படுகின்றது. தான் பெறும் ஊதியத்திற்கு நான் நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் என உன்னதமான சேவைகளை செய்பவர்கள்.

அரச சொத்தை, நிதியை துஸ்பிரயோகம், செய்யாதவர்கள் தான செய்த சேவைக்கு கைக்கூழியாக ஒருபோதும் அன்பளிப்பு பெறாதவர்கள்........என பல்வேறு கோணத்தில் இவர்களை நடுவர்கள் குழு அவதானித்து இவ் விருதைப் வழங்கியுள்ளார்கள்..... மேற்படி அதிகாரிகளுடன் மேலும் 5 அதிகாரிகள் ஆறுதல் பரிசுகளையும் பெற்றுக் கொண்டனர். தனக்கு அரச வாகனமில்லாத காலத்திலும் கூட இயற்கை அனர்தம், கொவிட் 19 காலத்திலும் தமது சொந்த வாகனம் அல்லது பொதுப் போக்குவரத்தில் மக்களது காலடியிக்குச் சென்று அவர்களது பிரச்சினைகளை உடனுக்கு உடன் தீரத்து வைப்பவர்கள், .....

பொதுமக்களுக்காக சேவை வழங்கு வதை முதன்மையாக கொண்டு நேர்மையாகவும், தமது கடமை நேரத்திற்கு அப்பால் தம்மை அர்ப்பணித்து பணியாற்றும் நேர்மையான அரச அதிகாரிகளை கண்டறியும் இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) செயற்திட்டத்தினை எக்கவுண்டபிலிட்டி லெப் நிறுவனத்துடன் இணைந்து ஐந்தாவது முறையாக ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது..இத்திட்டம் முதன் முதலாக நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இலங்கை உட்பட 12 நாடுகளில் இவ் சர்வதேச அமைப்பு இவ்விருதினை வழங்கும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஐந்து பேர் அடங்கிய அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவினால் விண்ணப்ப மதிப்பாய்வு மற்றும் நேர்காணல்கள் இவா்களது சேவைகளைப் பெற்ற பொதுமகக்ள், சக ஊழியர்கள் மேலதிகாரிகள் என சுமார் எழு மாத கால மிக நுணுக்கமான மதிப்பீட்டை தொடா்ந்து இவ் விருதுகள் வழங்கப்படுகின்றன. திரு ஒஸ்டின் பெர்னான்டோ, ஓய்வு பெற்ற சிரேஸ்ட அரச அதிகாரி எஸ் .தில்லைநடராஜா, ஓய்வு பெற்ற சிரேஸ்ட அரச அதிகாரி வைத்தியர் வின்யா ஆரியரத்தின, பொதுச் செயலாளர் சர்வோதய சிரமானத சங்கம் சிரீன் சருர் சமாதானம் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர் மற்றும் ரமனி ஜயசுந்தர நீதி மற்றும் பால்நிலை செயற்திட்டப் பணிப்பாளர் ஆகியோர் நடுவர் குழு உறுப்பிணர்களாவார் .

இந் நிகழ்வின்போது சிறந்த ஐந்து அரச அதிகாரிகளுக்கு இன்டக்ரிட்டி ஐக்கன் வழங்கப்பட்டவர்கள் பின்வருமாறு

இவர்களுக்கான விருதுகளை இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாகவும் நிதி ஆனைக் குழுவின் தலைவராக தற்போது கடமையாற்றும் சிரேஷ்ட அரச அதிகாரி சுமித் அபேசிங்க அவர்கள் கலந்து கொண்டு விருதினை வழங்கி வைத்தார்

(1) சுபாஜினி மதியழகன் பிரதேச செயலாளர் பிரதேச செயலகம் வலிகாமம் கிழக்கு ,கோப்பாய் (கடந்த 19 வருட காலமாக யுத்த காலத்தில் மெனிக் பாமிலிருந்து இன்று வரை அரச அதிகாரியாக கடமையாற்றுபவர்)

(2) யசோதா உதயகுமார் பிரசே செயலாளர் பிரதேச செயலகம் வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் (ஆசிரியராக, உதவி விரிவுரையாளராக கடந்த 20 வருடகாலமாக அரச அதிகாரியாக கடமையாற்றுபவர்)

(3) விஜயவர்தன அபேயவிக்கிரம நிசங்க வைத்தியர் மாவட்ட ஆதார வைத்தியசாலை. ரிகில்லகஸ்கட மற்றும் சுகாதார சேவைகள் அலுவலகம் மாவட்ட பணிப்பாளர் நுவரெலியா

(4) பிரதிபானி ஸ்ரீ விஜயந்தி மொல்லிமெகாட தாதி ஆதார வைத்தியசாலை எல்பிட்டிய

(5) நளின் பிரசன்ன விஜேசேகர மேலதிக சுகாதார வைத்தியர் பொதுச் சுகாதார பணிமனை அம்பலாங்கொடை

# பின்தங்கிய குடுமி மலைப் பிரதேசத்தில் இ.கி.மிசன் சுவாமி ஜீவனானந்தா சமூக சேவைத் திட்டம்!




மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிப்படை வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய குடுமி மலைப் பிரதேசத்தில் இ.கி.மிசன் சுவாமி ஜீவனானந்தா சமூக சேவைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்புக் கிளை தன்னுடைய நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் பயணத்தில் தற்போது 96 வருடங்களைப் பூர்த்தி செய்து இருக்கின்றது.

அது சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாடும் வகையில் 'சுவாமி ஜீவனானந்த சமூக சேவை திட்டம்' என்னும் கிராம நல திட்டத்தை, கிராமங்கள் தோறும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா ஜீ மகராஜின் ஞாபகார்த்தமாக இச் சேவைநலத் திட்டம் தற்போதைய பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அவர்களால் பிரஸ்தாபித்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மிகவும் பின்தங்கிய சேவைகள் தேவையான பிரதேசங்களில் இத் சமூக சேவை திட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் முதற் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பகுதியில் 3 கிராமங்களும், சித்தாண்டியை ஒட்டிய பெரிய வட்டுவான், ஈரளக்குளம் போன்ற நான்கு கிராமங்கள் இந்த சேவைப் பணிகளில் பயன் பெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகக் குடுமிமலை பிரதேசத்தில் உள்ள ஆறு குக்கிராமங்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அங்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையிலான தொண்டர் குழுவினர் அண்மையில் அங்கு விஜயம் செய்தனர்.

அங்கு சுவாமி கிராம மட்டத்தில் பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அங்கு அடிப்படைக் குடிநீர் வசதிகள், அறநெறிப் பாடசாலைகள், மாதந்தோறும் மருத்துவ முகாம்கள், பாடசாலை இடைவிலகலைத் தடுக்கும் வண்ணமாக ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான மேற்படிப்பு வசதிகள் மற்றும் அங்கிருந்து முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவிக்கான உதவித்தொகை போன்றன திட்டமிடப்பட்டுள்ளன.

வருங்காலங்களில் சுயதொழில் வாய்ப்பை முன்னிறுத்திப் பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சேவைகள் அத்தகைய அடிப்படை வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

**விபுலமாமணி. வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**

# கல்முனையில் சமூக செயற்பாட்டு சான்றிதழ் கற்கைநெறி தோடர்கிறது





**( வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்த மூன்று மாத கால சமூகசெயற்பாடு சான்றிதழ் கற்கைநெறி பிரதி சனி ஞாயிறு தினங்களில் கிரமமாக நடைபெற்று வருகிறது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வலையமைப்பின் பொதுச்சபை இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரனின் ஒழுங்கமைப்பில் வகுப்புகள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் ஞாயிறு முழுநேர செயலமர்வை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிட்டா மோகன் நடாத்தியிருந்தார்.

# இரண்டு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டங்களில் தேரிவித்தும் இன்னும் பாதை சேப்பனிடப்படவில்லை!

## கூட்டங்களால் என்ன பயன்?; பொதுமக்கள் கேள்வி!




**( வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அரைகுறையாக கிடக்கும் பாதை செப்பனிடப்பட வேண்டும் என இரண்டு தடவைகள் கூறப்பட்ட பொழுதிலும் இன்னும் அது செப்பனிடப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் பிரசன்னத்தில் பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொழுது குறித்த விபுலானந்த வீதி கார்பெட் இடப்பட்டும் இருமருங்கிலும் முடிவுறுத்தப்படாமல் இருப்பது குறித்து முறைப்பாடு இரு தடவைகளில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இரண்டு கூட்டங்களில் இந்த முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

அதில் கலந்து கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர் இதனைச் சீர்செய்து தருவதாக பகிரங்கமாக உறுதி அளித்திருந்தார். ஆனால் ஐந்து மாதங்கள் கடந்தும் இன்னும் அந்த காப்பட் வீதி இது மருங்கிலும் செப்பனிடப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களால் பொதுமக்களுக்கு என்ன பயன் ? பல மணி நேரம் மனித வலு மற்றும் நிதி செலவழிப்பதில் என்ன பிரயோசனம்? என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

இவ் விபுலானந்த வீதி ஏனவே கொங்கிறீட் வீதியாக இருந்தது. ஆனால், மக்களின் எந்தவித கருத்தும் கணக்கு எடுக்கப்படாமல் அதற்கு மேலே இரண்டு அடி உயரத்தில் காப்பட் இடப்பட்டது .இதனால் மக்களின் குடிமனைகள் தாழ்ந்து போனது. அத்துடன் வாகனங்களை வீதிகளில் ஏற்றுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். அதனால் வாகனங்கள் பழுதடைந்து விடுகின்றன .எனவே இதனை சீர் செய்து தருமாறு அந்த மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு






















**(சில்மியா யூசுப்)**

இலங்கையினுடைய இந்தோனேசியாவின் தூதரகம் மற்றும் இலங்கையில் உள்ள இந்தோனேசிய சமூகம் இந்தோனேசியாவின் 78வது சுதந்திர தினத்தை ஆகஸ்ட் 17 வியாழக்கிழமை அன்று கொழும்பிலுள்ள இந்தோனேசிய தூதரகத்தில் கொண்டாடியது.

இந்தோனேசிய தூதுவர் தேவி குஸ்டினா டோபிங் தனது நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந் நிகழ்வில் இந்தோனிசிய நாட்டின் கலை ,கலாச்சார நிகழ்வுகளும் நடைபெற்றன. அத்துடன் இந்தோனியா தூதுவர் தேவி இங்கு உரையாற்றுகையில் கடந்த வாரம் ஆசிய மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் எமது தூது வரலாயத்தில் கொண்டாடப்பட்டது. அத்துடன் கடந்த காலங்களில் இந்தோனிசியா இலங்கை கலை கலாச்சார நிகழ்வுகள், இலங்கையில் வாழும் மலாய சமுகத்தினரின் மலாயர் கலை கலாச்சார நிகழ்வுகள் , கொவிட் 19 காலத்தில் இந்தோனிசியா அரசாங்கம் மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு உலர் உணவுப் பொதிகள் நாட்டின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க்பபட்ட திட்டங்களையும் இந்தோனிசியா - இலங்கை நட்புறவு, வர்த்தக சங்க நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்தார்.

இந்தோனேசிவின் 78ம் ஆண்டு விழாவினை கேக் வெட்டி , வருகைதந்தவர்களுக்கு உணவு உபசரிப்புக்களுடன் நடைபெற்றது.

இவ்விழாவில் மதத் தலைவர்கள், இந்தோனேசிய சமூகத்தினர், தூதரக அதிகாரிகள், குடும்பத்தினர், உள்ளூர் பிரமுகர்கள், இலங்கை இந்தோனேசியா நட்புறவு சங்கத்தின் அதிகாரிகள், முஸ்லிம் நிறுவனங்களின் பிரதிநிதிகள், ரோயல் கல்லூரி மற்றும் சங்க சமுத்தி அறக்கட்டளை மாணவர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டதுடன் இந்தோனேசியாவின் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆலோசகர் போய்கே நூருதீன் (Boyke Nooruddin) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நல்லாத்தானே இருந்தான் ஏன் தற்கொலை செய்தான்?

இந்த ஒரு வார்த்தையுடன் ஒரு தற்கொலையை செய்தியாக கடந்துவிட முடியாது. தற்கொலை செய்வது, கோழைத்தனம், அனைத்துக்கும் தீர்வு இருக்கு என்று சொல்வது சரிதான்.

ஆனால் எவர்? அவன் உயிருடன் இருக்கையில், அவனுடைய பிரச்சினையை தீர்த்து வைப்பதிலும், அவனுக்கு தேவையானதை நிறைவேற்றுவதிலும் பங்காற்றினீர்கள், என்றால் விடை பூச்சியம்.

மாறாக அவனுக்கான பிரச்சினைகளை கூட்டுவதிலும் தற்கொலை செய் என்று தூண்டுவதனையும் இந்த சமுதாயம் செய்கின்றது.

பசிப்பவனுக்கு சோறு கொடுக்க தயக்கம் காட்டுபவர்கள், படுப்பதற்கு தலையாணை கொடுத்து பயனில்லை. பசி போனால் தான் தூக்கம் வரும்.

80 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் ஒரு மாம்பழம் வாங்கினவனும்,சாப்பிட இல்லாமல் தற்கொலை செய்தவனும் இங்கு தான் உள்ளார்கள்.

தற்கொலை வரையில் செல்ல துணிபவன், குறிப்பிட்ட செயலில் புனிதமாகவும், இதய சுத்தியுடனும் இருந்து இருப்பான். அதில் நேர்மை இருந்து இருக்கும். காதலோ, பணத்தேவையோ, வாழ்க்கையின் எதிர்பார்ப்போ, உறவுகளின் பிரிவோ, வேலை கிடைக்காமையே, தனக்கான சுதந்திரமோ என்னவாகவும் அது இருக்கலாம்.

தற்கொலை வரையில் செல்பவன் தனக்கான பிரச்சினையில் அல்லது எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு எல்லை வரையில் சென்று இருப்பான்.

என்னடா இது உலகம் என்று இயலாத நிலையில் தற்கொலையை ஒரு வழியாக தெரிவு செய்திருப்பான்.

இருக்கும் வரையில் அவனவனின் இயலுமையை கொண்டாடுவதற்கு எமது சமுதாயம் தயாராகவில்லை. அப்படியிருக்கையில் இறந்த பின்னரா அனுதாபங்களும் விளக்கங்களும் தேவையற்றவை.

இந்த உலகில் சரிந்து போனவனை தூக்கி விட வேண்டும் ஏன் என்றால் அவன் மீண்டும் சரியாத வகையில் பல எண்ணங்களையும் செயல்களையும் செய்வான். சரிந்தவனே தற்கொலையை தேர்ந்தெடுப்பான். அவனது வாழ்க்கையின் பிரச்சினையை தீர்த்தால் அவன் இந்த உலகுக்கு முன்னோடியாவான்.

எமது சமூகத்தில் அண்மைக்காலமாக தற்கொலைகள் அதிகரித்துள்ளது. காரணம் தேடினால் ஐயோ பாவங்கள், கை கொடுத்து காப்பாற்றி அவர்களையும் வாழ வைத்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

கிளிநொச்சியில் கணித பிரிவில் முதலிடம் பெற்ற மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன் இன்று தற்கொலை.

பிரச்சினைகளுக்கு தற்கொலை தீர்வாகாது என்பதையே எல்லா மதங்களும் போதிக்கின்றன. கடவுளால் அருளப்பட்ட உயிரை மாய்த்துக்கொள்ள எவருக்கும் உரிமையுமில்லை, சட்டத்திலும் அதற்கு இடமில்லை. ஆனால் அனைத்தும் கற்றுத் தேர்ந்தவர்களாகவே இருந்தாலும்



கூட பிரச்சினை எனும்போது எம்மில் பெரும்பாலானோர் தற்கொலையை இறுதி முடிவாகக் கொள்கின்றனர். எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வுஉண்டு. ஆனால் அது தற்கொலையாக மாற முடியாது. அதிலும் தம்மை சார்ந்தோரையும் இதற்கு பலிக்கடாவாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இறுதிவரை ஒருவரது பிரச்சினை என்னவென்பதே அவரை சார்ந்தோருக்கு தெரியவருவதில்லை. காரணம் தம்மை சுற்றியுள்ளவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற எண்ணம் தான் அது. அதேபோன்று வாழ்க்கை குறித்த போதிய விழிப்புணர்வு, மனப்பக்குவம் இல்லாமையும் மற்றொரு காரணமாகும்.

பிரச்சினைகளை கண்டு எளிதில் துவண்டு விடுகிறார்கள். பிரச்சினைக்குரிய தீர்வை தேடுவதற்கு மாறாக உயிரை மாய்த்துக்கொள்ள விளைகிறார்கள். இன்னும் சிலர் வறுமை, தொழிலின்மை, குடும்பத்தில் முரண்பாடு போன்ற காரணங்களால் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

உலகில் பிரச்சினை இல்லாத நபர்களே இங்கு கிடையாது. பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதைவிடுத்து தற்கொலை எனும் முடிவை தேடிக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த ஒருவாரகாலமாக பதிவாகி வருகின்ற தற்கொலை சம்பவங்கள் கவலையளிக்கின்றன. மக்கள் மத்தியில் போதுமான விழிப்புணர்வின்மையே இதற்கு பிரதான காரணம். வறுமை, நிதி நெருக்கடியென்பது எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் அவற்றை கடந்துவர முயற்சிக்க வேண்டும்.

மனஅழுத்தம், நெருக்கடிகளுக்குள்ளானவர்களை அதிலிருந்து வெளிக் கொணர்வதற்கு சமூக ஆர்வலர்கள் உட்பட சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினரும் முன்வர வேண்டும். அதற்கு பொதுமக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. குடும்ப மட்டத்திலிருந்து உளவியல் ரீதியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

இங்கு பலருக்கு பிரச்சினைகளை எதிர்த்துப் போராட தெரிவதில்லை. பிரச்சினைகளை அணுகக்கூடிய மனப்பக்குவம் மக்கள் மத்தியில் மிகக்குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. சுகாதாரத்தரப்பினர் என்ற ரீதியில் நாம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

உளவியல் ரீதியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு துரித அழைப்பு இலக்கங்கள் கூட பயன்பாட்டில் உள்ளன.

ஆனால் எம்மில் பலருக்கு இது தொடர்பில் தெளிவில்லை. யாரேனும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருந்தால் அல்லது வைத்திய ஆலோசனை தேவைப்படுமாக இருந்தால் 1925 என்ற துரித அழைப்பேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ள முடியும்.

மேலும் சுமித்ரேயோ என்ற அமைப்பு இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க 0112682535 அல்லது 0112682570 ஆகிய தொலைபேசி இலக்கங்களையும் 1333 என்ற துரித இலக்கத்தையும் அறிவித்துள்ளது. அதேபோன்று 1926 என்ற தேசிய மனநல உதவி துரித அழைப்பு எண்ணும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களுக்கு இந்த விடயத்தில் பாரிய பொறுப்பு உள்ளது. வெறுமனே செய்திகளை பதிவிடாமல் இதுபோன்ற சம்பவங்களை கட்டுப்படுத்த ஊடகங்கள் பக்கபலமாக இருக்க வேண்டும்.

**ஆக்கம்**
**தனிஒருவன்**
**நன்றி**

**சுகுணன் குணசிங்கம் முகப்புத்தகத்திலிருந்து.**

# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் மீலாத் விழா போட்டி விழா நிகழ்ச்சிகள்




**(எம்.ஏ.றமீஸ்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் இம்முறை மீலாதுன் நபி தின விழாவினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வினையொட்டி கிழக்கு மாகாண மட்டத்தில் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டி நிகழ்ச்சிகள் யாவும் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். போட்டிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் குறிப்பிடப்படும் இடமொன்றிற்கு சமூகமளித்து நேரடியாக போட்டியில் பங்கு பற்ற வேண்டும்.

கட்டுரை கவிதை ஆகிய இரு பிரிவுகளில் திறந்த போட்டியாக இடம்பெறும் போட்டிகளுக்காக 19 வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்கு பற்ற முடியும். கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 'சகவாழ்வுக்கு நபிகளாரின் வழிகாட்டல்' எனும் தலைப்பில்; 750 சொற்களுக்கு குறையாமல் கட்டுரைகளை எழுதுதல் வேண்டும். 'அண்ணலாரின் அழகிய முன்மாதிரி' எனும் தலைப்பில் கவிதைப் போட்யில் பங்கு பற்றும் போட்டியாளர்கள் தமது கவிதை ஆக்கத்தினை எழுத முடியும். மரபுக் கவிதைகள் 40 அடிகள் கொண்டதாக அமைய வேண்டும்.

கிழக்கு மாகாணத்தினை வதிவிடமாகக் கொண்டவர்கள் மாத்திரம் இப்போட்டிகளுக்காக விண்ணப்பிக்க முடியும். இம்மாகாணத்தில் உள்ளவர்கள் இன மத வேறுபாடின்றி இப்போட்டிகளில் பங்கு கொள்ள முடியும். போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் தமது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர்களிடம் கையளிக்க வேண்டும்.

கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெறுபவர்க்கு 15 ஆயிரம் பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும். இரண்டாமிடம் பெறுபவர்க்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசு சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளதோடு, மூன்றாமிடம் பெறுபவர்க்கு ஐயாயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு ஏழாயிரம், ஐயாயிரம் மற்றும் மூவாயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டி நிகழ்ச்சிகளில் முதலிடம் பெறும் ஆக்கங்கள் இம்முறை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்படும் மீலாத் சிறப்பு மலரில் இணைத்துக் கொள்ளப்படும்.

கடந்த சில காலங்களாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் நடைபெறாமல் தடைப்பட்டிருந்த மீலாத் விழா நிகழ்வுகள் இம்முறை புதிதாக பதவியேற்ற கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் மூலம் மீளவும் நடைபெறுவது மாகாண மட்டத்தில் உள்ள மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பினை பெற்றுள்ளதாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரும் மீலாத் விழா ஏற்பாட்டுக் குழு உறுப்பினருமான ஏ.எல்.தௌபீக் தெரிவித்தார்.

# மலையகத்தில் இ.கி.மின் சுவாமி நீலமாதவானந்தா!



**( வி.ரி. சகாதேவராஜா)**

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மடத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் (19) சனிக்கிழமை மலையகத்துக்கு விஜயம் செய்தார்.

அங்கு பண்டாரவளை மற்றும் ஹாலிஎல ஆகிய இடங்களில் ஆசிரியர்களுக்கான ஆன்மீக கருத்தரங்கை நடத்தினார் .

அத்தோடு கொட்டகலவில் மிஷன் பக்தர்களோடு சத்சங்கம் ஒன்றை நடத்தினார். மலையகத்தில் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜிக்கு பாரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

# கல்முனை தாராள உள்ளங்கள் அமைப்பால் கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டன

**(பாறுக் ஷிஹான்)**

தேவை உடைய 15 பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களிற்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு கல்முனை தாராள உள்ளங்கள் அறக்கட்டளை அமைப்பினால் மாதாந்த கொடுப்பனவு ஞாயிற்றுக்கிழமை(20) வழங்கப்பட்டன.

இது இவ் அமைப்பின் இரண்டாம் கட்ட மாதாந்த உதவித்திட்டமாகும்.

இந்நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சந்திரகுமார் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக நன்கொடையாளரும் தாராள உள்ளங்கள் அறக்கட்டளையின் மகளீர் பிரிவு தலைவியுமான திருமதி.ஷரேன் பியுமி(பி





ரான்ஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அமைப்பின் தலைவர் ஜெ.ஜெயப்பிரகாஸ், செயலாளர் எஸ். ஸ்ரீகரன் பொருளாளர்,எஸ்.யுவசந்தராஜா மற்றும் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது உரையாற்றிய சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.சந்திரகுமார் தாராள உள்ளங்கள் அறக்கட்டளையானது அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சிறந்த சமூகசேவையாற்றி வருவதுடன் எமது மக்களின் வாழ்வாதார, கல்வி உதவித்திட்டங்களை ஆற்றி வருகின்றமையை பாராட்டியதுடன் தொடர்ந்தும் இவ்வாறான பணிகளை செய்யவேண்டும் எனவும் கூறினார்.

# மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கோகுலராஜன் கடமையேற்பு

**(நூருல் ஹுதா உமர்)**

நிந்தவூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்ற பாலரட்ணம் கோகுலராஜன் நேற்று 2023.08.21 மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையேற்றுக் கொண்டார்

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற கடமையேற்பு நிகழ்வில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்



கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் 2023.01.01 ந் திகதி முதல் செயற்படும் வண்ணம் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி உயர்த்தப்பட்ட பி. கோகுலராஜன் நிந்தவூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக மிகச் சிறப்பான முறையில் பணியாற்றிய வராவார்.

2004 ம் ஆண்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் பொத்துவில், கல்முனை தமிழ் பிரிவு, காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக அர்ப்பணிப்புடன் செயலாற்றி பலரது நன்மதிப்பையும் பெற்றவராவார். கிழக்கு மாகாண மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைவாக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்து மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையேற்றுக் கொண்ட இவரது பணி சிறக்க வாழ்த்துக்கள்.